தமிழ் அழகியல் --1

தமிழரின் ” மலர்ப் பண்பாடு “ தாவர அறிவியல் ( Botany ) நுட்பம் கொண்டது. ஒரு மலரின் ஒவ்வொரு பருவ நிலையையும் உற்றுக் கவனித்து பூவின் வளர்ச்சியைப் பல நிலைகளாகப் பிரித்து தனித்தனி பெயர் வைத்து அழைத்தனர். 1 அரும்பு : ஒரு பூ காலையில் அரும்பி வரும் நிலை 2 நனை - வெளியில் தெரியத் தொடங்கி வெளிச்சத்தில் நனையும் நிலை 3 முகை –முத்துப்போல் ஆகும் நிலை 4 முகிழ் – நறுமணத்துடன்முகிழ்த்தல் 5மொட்டு – கண்ணுக்குத்தெரியும்மொட்டு 6 போது –மலரும்பொழுது காணப்படும் புடைத்த நிலை 7மலர் – மலர்தல் செய்யும் நிலை 8 பூ – முழுமையாகப் பூத்த மலர் 9 வீ – தரையில் உதிரும் பூ 10 பொதும்பர் – பூத்துக் குலுங்கும் நிலை .

11பொம்மல் – தரையில் உதிர்ந்த புதுப் பூ

12செம்மல் – தரையில் உதிர்ந்த பூ சிவந்து அழுகும் நிலை.

”காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் இந்நோய்” என்று வள்ளுவர் பேசும்போது காமத்தை ஒரு பூவாக உருவகிக்கும்போது அரும்பு, போது, மலர் எனும் மூன்று நிலைகளை இயல்பாகக் கையாள்வதைக் கவனியுங்கள். நாம் இன்று பூக்களை அந்த அளவுக்கு நுட்மாகக் கவனிக்கும் ஆற்றலை இழந்து விட்டோம். அதனால் பூவின் பல பெயர்ச்சொற்களை நாம் இழந்து வருகிறோம்.



தமிழ் அழகியல்- 2

தமிழ்ப் பெண்களின் நகைகள் தனித்துவமானவை. தமிழ்ச் சமூகம் ஒரு விவசாயச் சமுகம்.எனவே அதன் அணிகலன்கள அனைத்தும்

பூ, செடி, காய், கனி ஆகியவற்றின் வடிவத்தில் இருக்கும். பூக்கம்மல், மாங்கா மாலை, நாயுருவிச் செயின் என்று எல்லாமே ORGANIC DESIGN என்று ஆங்கிலத்தில் நாம் குறிப்பிடும் விதத்தில் இருக்கும். இதில் பாம்படம் , தண்டட்டி எனும் நகைகள் மட்டும் முழுக்க முழுக்க தாவர வடிவில் இல்லாமல் ஜியோமிதி வடிவத்தில் ( GEOMETRIC FORMS ) இருப்பது மிகப் பெரிய கலை சாதனை. ஒரு கூம்பு, கனசதுரம், பந்து என்று பல்வேறு ஜியோமிதி வடிவங்களை ஒரு அணிகலனாக அமைத்திருக்கிறார்கள்.இதனை 25 ஆண்டுகளுக்கு முன் நான் எழுதிய “தமிழ் அழகியல்” ( 1994 ) என்ற நூலில் காணலாம். விரைவில் ”யாளி பிரிண்ட்” வெளியீடாக வரவிருக்கிறது.

